**சப்ரகமுவ மாகாண சபை - 2015**

----------------------------------------------------

சப்ரகமுவ மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. இதில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பான விபரமான அறிக்கை மாகாண சபையில் முன்வைக்கப்படுவதற்காகக் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 02. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சப்ரகமுவ மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2016 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்காக 2016 ஜூன் 15 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தலின் செயல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | மொத்த கணக்குகள் | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்காத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 27 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - |
| (iii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | 24 | 23 | 01 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 07 | 06 | 01 |
| (v) | நிதியக் கணக்குகள் | 02 | 02 | - |
| (vi) | நியதிச்சட்ட கணக்குகள் | 04 | 03 | 01 |
| (vii) | அங்கத்தவர் முற்பணக் கணக்குகள் | 02 | 02 | - |
| | | 67 | 64 | 03 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் முதலமைச்சின் வைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 32,399,078 ஆகக் காட்டப்பட்டிருந்தும் உரிய ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 27,014,035 ஆக இருந்ததனால் ரூபா 5,385,043 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் 04 வணிக முற்பணக் கணக்குகளில் வருடாந்தம் வித்தியாசத்துடன் முன்கொண்டுவரப்பட்ட எல்லையை விஞ்சிய செலவு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 14,387,855 ஆகும்.

### 2.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

01 ஆண்டு காலத்தை மிகைத்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,528,191 ஆக இருந்ததுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 658,586 ஆகும்.

### 2.2.5 பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2016 ஜுன் 30 ஆந் திகதியளவில் 68 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அக்கணக்காய்வு ஐய வினாக்களில் ஈடுபடுத்தப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,260,895,428 ஆகும்.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் 226(5),(6) ஆம் பிரிவின் கீழும் நகரசபை கட்டளைச் சட்டத்தின் 183(5) ஆம் பிரிவின் கீழும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(8),(9) ஆம் பிரிவுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானம் தெரியப்படுத்தப்பட்ட திகதி யிலிருந்து 14 நாட்களுக்குள் மிகை அறவீடு விதிக்கப்பட்டவரினால் உள்ளுராட்சி ஆணையாளருக்கு உரிய பணம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தப்படவில்லையாயின் மற்றும் மேன்முறையீடுகள் செய்யப்படவில்லை யாயின் உரிய நபர் வசிக்கும் பிரதேசத்தின் நீதிமன்ற அதிகாரமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்காதிருப்பின் உரிய நபர் வசிக்கும் பிரதேசத்திலுள்ள நீதிமன்ற அதிகாரமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து உரிய பணத்தை அறவிடுவதற்கு உள்ளுராட்சி ஆணையாளரால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 13 உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட மிகைக் கட்டண சான்றிதழ்களில் மீளாய்வாண்டின் |

| | |
|---|---|
| | இறுதிவரை 21 மிகைக் கட்டண சான்றிதழ்களின் கீழ் ரூபா 2,204,716 கூட்டுத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட மிகைக் கட்டண சான்றிதழ் தொடர்பாக அந்த அதிகாரச் சட்டத்தின் 172(7) ஆம் உப பிரிவு | மத்திய அரசாங்கத்தின் உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளருக்கே மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென 2015 செப்தெம்பர் 07 ஆந் திகதிய சட்டமா அதிபரின் விளக்கமளித்தலின் பிரகாரம் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் ரூபா 123,857 பெறுமதியான 13 மிகைக்கட்டண சான்றிதழ்கள் தொடர்பாக மாகாண சபைகளின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்குச் சமர்ப்பித்துப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) I ஆம் தொகுதியின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் உதவிச் செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்காக பதில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு 10 ஆண்டுகள் மிகைத்திருந்த போதிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உத்தியோகத்தர் களுக்கு மத்தியில் கடமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படாது தொடர்ச்சியாக பதிற்கடமைச் சம்பளங்களின் அடிப்படையில் மேற்கூறிய பதவிகள் செயற்படுகின்றமை அவதானிக்கப் பட்டது. |
| (ii) I ஆவது தொகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 12:2:4 ஆம் பந்தி | மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பதவியின் நிரந்தர உத்தியோகத்தர், உதவிச் செயலாளர் பதவியில் பதில் கடமை ஆற்றுவதற்காக நியமிக்கப்பட்டதன் காரணமாக அப்பதவி வெற்றிடமாக உள்ளதாகக் கருதி அப்பதவிக்கு பதிற் கடமை சம்பளங்களின் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு 2005 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்கு பதிற் கடமை சம்பளமாக ரூபா 118,018 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண நிதி விதிக்கோவை | |
| (i) விதி 117.4 | மாகாண சபை தொடர்பாக சேகரிக்கப்படுகின்ற பணத்தை அனுப்பி வைக்கும் போது அச்சந்தர்ப்பம் வரை ஒன்று சேர்க்கப்பட்டுள்ள அனைத்து பணமும் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் இரத்தினபுரி |

மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களினால் இதற்கு முரணாகச் செயற்பட்டதன் காரணமாக 2015 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த பிரதேச செயலகங்களின் வங்கி கணக்குகளில் ரூபா 101,497,068 கூட்டு மொத்தமான மீதிகள் காணப்பட்டன. மாகாணத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தக்கூடிய பணம் எதுவித வட்டியுமின்றி வங்கி நடைமுறைக் கணக்குகளில் ஆண்டு இறுதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) விதி 259.2

சுகாதாரத் திணைக்களத்தில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வரை 2005 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரை ரூபா 62,012,807 தொகையான 262 கட்டுநிதி மீதிகள் தீர்த்து வைக்கப் படாதிருந்தன.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

(i) நிதிப்பிரமாணம் 571

இரத்தினபுரி வலயக்கல்வி அலுவலகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 874,865 கூட்டு மொத்தமான 09 பொது வைப்புக்கள் காணப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் ஏனைய பரிசோதனைகளின் காரணமாக பொது வைப்புக் கணக்குகளின் 07 மீதிகளின் ரூபா 349,282 கூட்டுத் தொகை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கோவைகள் கிடைக்காமையின் காரணமாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் ஓய்வூதிய பணிக்கொடைப் பணம் ரூபா 512,083 தொகையானது 2013 ஜூன் 12 ஆந் திகதியிலிருந்து பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

(இ) மாணவர்களுக்குச் செலுத்தாது திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 13,500 கூட்டுத் தொகையான புலமைப் பரிசில் பணம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பொதுவைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 571.3 | சுகாதாரத் திணைக்களத்தின் ரூபா 1,287,393 பெறுமதியான வைப்புக்கள் சம்பந்தமாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.1 ஆம் வழிகாட்டிகள் | பிரதம செயலகத்தின் பயிற்சி மற்றும் இயலளவு அபிவிருத்தி செலவு விடயங்களின் மூலம் ரூபா 33,752,880 செலவு செய்து 1,050 கூடாரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தரம் தொடர்பாக பரீட்சிக்கப்படாது கூடாரங்கள் பொறுப்பேற்கப்பட்டு மரணாதார மற்றும் ஏனைய நலன்புரிச் சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(I) இரண்டாவது ஆகக் குறைந்த விலை குறிப்பிடப்பட்ட கூடாரங்களில் நீர்க் கசிவினைத் தவிர்ப்பதற்கு மேலதிக முத்திரைகள் பயன்படுத்தாமையானது ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த கேள்விதாரர்களை நிராகரிப்பதற்கு காரணமாக இருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட கூடாரங்களிலும் மேலதிக முத்திரைகள் பயன்படுத்தப் படாதிருந்ததுடன் ஆகக் குறைந்த விலையைக் கவனத்தில் கொள்ளாததன் காரணமாக ரூபா 2,856,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.<br><br>(II) விடயம் தொடர்பான நிபுணத்துவம் கொண்ட மூன்றாம் தரப்பினர் மூலம் இக் கூடாரங்களின் பெறுமதி ரூபா 19,330 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததனால் அனைத்து கொள்கலன்களிற்காகவும் மிகை யாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 11,223,765 ஆக அவதானிக்கப் பட்டது. |
| (எ) சனாதிபதி செயலகத்தின் மற்றும் திறைசேரியின் சம்மதத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட 2001 மார்ச் 28 ஆந் திகதிய நிதி 01/2001 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சுற்றுநிருபம் | |
| (i) 3.1 ஆம் பந்தி | பல்வேறு மாகாண சபைகளில் அவற்றின் அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கு வதற்காக நடைமுறைப் படுத்தப்படுகின்ற கடன்திட்ட முறைமைகளில் காணப்படுகின்ற வேறுபாட்டினை ஒழித்து ஒத்த முறைமை ஒன்றை உருவாக்கும் நோக்குடன் வழங்கக் கூடிய உச்ச அளவு எல்லை ரூபா 250,000 ஆகக் காட்டப்பட்ட போதிலும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குத் தெரியப்படுத்தி அல்லது அதன் ஆலோ |

| | | |
|---|---|---|
| | | சனைகளை அல்லது கருத்துரைகளைப் பெற்றுக் கொள்ளாது 2012 நவம்பர் 07 மற்றும் 2014 ஏப்ரல் 23 ஆந் திகதி சப்ரகமுவ மாகாண சபையின் அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அந்த எல்லை ரூபா 672,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 3.2.7 ஆம் உப பந்தியின் பிரகாரம் அதன் 3.2.1 இலிருந்து 3.2.4 வரையான பந்திகள் | அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு உரிய நிறுவனங்களினால் விலைப்பட்டியல் (இன்வொயிஸ்) சமர்ப்பி த்திருக்க வேண்டியதுடன் விலைப்பட்டியலில் குறிப்பிட்ட பணம் அல்லது கடன் எல்லை ஆகிய இரண்டில் குறைந்த பணம் மாத்திரம் கடனாக வழங்கப்பட வேண்டும். எனினும் அதற்கு முரணாக சபைச் செயலகத்தினால் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 300,262 கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரின் கடிதம் | (அ) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் தங்களின் கூட்டங்கள், கருத்தர ங்குகள், செயலமர்வுகள் என்பவ ற்றை நடாத்துவதற்காக ஹோட்டல்க ளைத் தெரிவு செய்யக்கூடாது. அத்துடன், உள்நாட்டுப் பயணத்தின் போது உணவு மற்றும் தங்குமிடங்களுக்காகச் செலுத்த வேண்டிய ஹோட்டல் கட்டணங்கள் அரசாங்க பணத்தில் தீர்த்துவைக்கப் படலாகாது எனவும் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக மாகாண விளையா ட்டுக்கள் அபிவிருத்தி திணைக்க ளத்தால் 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 03 கருத்தரங்குக ளிற்காக ரூபா 1,113,693 கூட்டுத் தொகை தனிப்பட்ட ஹோட்டல் களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ஆ) சபைச் செயலகத்தினால் 2013-2015 காலப்பகுதியுள் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,766,795 மொத்த தொகை தனிப்பட்ட ஹோட்டல் களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. பிரதேசத்திற்கு வெளியே செயலமர்வு களை நடாத்தியதன் காரணமாக எரிபொருளுக்காக ரூபா 1,288,142 பணமும் இடைநேர் படிகள், பிரயாணச் செலவுகள், வாடகை, வாகனச் செலவுகள் என்பவற்றிற்காக ரூபா 64,258 தொகையுமாக ரூபா 1,352,400 கூட்டு மொத்த தொகை மேலதிக செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை சரியாக உறுதிப்படுத்தாமையின் காரணமாக |

| | | |
|---|---|---|
| | | மேலதிக அறை வாடகையாக ரூபா 2,675,487 செலவு செய்யப் பட்டிருந்தது. |
| (ஏ) | திறைசேரிச் செயலாளரின் 2015 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 4/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபம் | அரசாங்க கம்பனிகள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றை உள்ளடக்கிய அனைத்து அரசாங்க நிறுவனங்களினால் பொது மக்களுக்கு, ஊழியர்களுக்கு மற்றும் சேவையைப் பெற்றுக் கொள்ளுகின்ற ஏனைய தரப்பினர்களுக்கு இலவசமாகப் பகிர்ந்தளிப்பதற்காக அச்சிடப்படுகின்ற தினக் குறிப்பு புத்தகங்களும் நாட்காட்டி களையும் அச்சிடுவதனை 2016 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தி வைக்குமாறு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தெரியப் படுத்தப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முரணாக சப்ரகமுவ மாகாண சபை தொடர்பாக அதன் சபைச் செயலகம் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,127,636 செலவு செய்து 2023 முகாமைத்துவ தினப் பதிவேடுகளையும் ரூபா 658,139 செலவு செய்து 4198 சிறிய தினப்பதிவேடுகளுமாக ரூபா 1,785,775 மொத்த தொகையான தினப்பதிவேடுகளை அச்சிடுவதற்கு நடவ டிக்கை எடுத்திருந்தது. |
| (ஐ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க நிதி மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சு சுற்றுநிருபம் மற்றும் 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 7/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டிக் கையேட்டின் 11.3 ஆம் பிரிவு | (I) பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிர்மாணச் செயற்பாடுகளை உப ஒப்பந்தத்திற்கு வழங்க முடியாது எனக் காட்டப்பட்டிருந்தும் இர/பலாங் கொடை தாமஹன மஹா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் கையொப்பமிட்ட ரூபா 913,400 பெறுமதியான விஞ்ஞான ஆய்வு கூடத்தை திருத்துதல் மற்றும் விளையாட்டு மைதானத்தின் மேல் சுவரை நிர்மாணிக்கும் வேலைக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(II) மாகாண கல்வி அமைச்சின் மூலம் அட்டுளுகம கல்வி அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் நிலத்தை அழகுபடுத்தும் செயற்பாட்டிற்காக ரூபா 1,769,174 செலவு செய்யப்ப ட்டிருந்தது. இச் செயற்பாடு கே/தெஹி/அட்டுளுகம மாயாதுன்ன வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒப்படை க்கப்பட்டிருந்ததுடன் இந்த ஒப்பந்தமும் உடன்படிக்கையின்றி உப ஒப்பந்தம் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதாக கணக் காய்வின் போது வெளிப்படுத்தப் பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஒ) | 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் ஓய்வூதிய சுற்றுநிருபம் | நடைமுறை மாதத்தில் ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பங்களிப்புப் பணமும் அரசாங்கத்தின் பங்களிப்புப் பணமும் அடுத்து வரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 07 நிறுவனங்கள் ரூபா 302,031 தொகையான பணத்தை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்திருந்தன. |
| (ஓ) | 2013 மே 22 ஆந் திகதிய 2013/23 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் பாடசாலைகளில் முதலாந்தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான சுற்றுநிருபத்தின் 18 ஆவது பிரிவு | 2015 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் ரூபா 4,200 வீதம் ரூபா 358,000 மொத்த தொகையானது இர/ஹல்மில்லகெடிய வித்தியாலயத்தின் அதிபரினால் பெற்றோர் பிரதிநிதி ஒருவரின் வாயிலாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. |

## 03. வருமான முகாமைத்துவம்

**கடந்த 05 ஆண்டுகளுக்கான வருமான உழைப்பு**

2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானங்கள் பின்வருமாறாகும்.

| ஆண்டு | வரி வருமானம் | வரியல்லா வருமானம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2011 | 1,943,637,444 | 416,079,145 |
| 2012 | 2,007,749,583 | 496,404,402 |
| 2013 | 2,163,127,945 | 496,200,284 |
| 2014 | 2,394,497,364 | 676,362,034 |
| 2015 | 2,832,257,548 | 725,367,341 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வருமான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது கடந்த ஆண்டிற்கான உண்மையான வருமானம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாததன் காரணமாக 09 வருமானத் தலைப்புக்களுக்கு ரூபா 886,381,939 குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண நிதி விதி 41.1.4 இன் பிரகாரம் முடியுமான அளவில் நடைமுறைச் சாத்தியமாகவும் சரியாகவும் மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் கடன் மற்றும் முற்பணங்களின் வட்டி வருமானங்களை மதிப்பீடு செய்யும் போது உத்தியோகத்தர்களின் தரங்களின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள மற்றும் மீண்டும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் செலுத்தக்கூடிய அளவு என்பவற்றை கவனத்தில் கொண்டு மீளாய்வாண்டில் ஏற்படக்கூடிய உள்ளபடியான வரவு மீதியின் அடிப்படையில் வட்டியைக் கணித்து மதிப்பீட்டினைத் தயாரிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் எதுவித அடிப்படையுமின்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) சப்ரகமுவ மாகாணத்தின் 09 பிரதேச செயலகங்களினால் பல்வேறு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 23,530,654 கூட்டு மொத்தமான நீண்டகாலக் குத்தகை மற்றும் தண்டப் பணமும் அறநாயக்க பிரதேச செயலகத்தின் ரூபா 43,442 தொகையான வருடாந்தக் குத்தகையும் தண்டப் பணமும் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அது தொடர்பாக 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 96/05 ஆம் இலக்க காணி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக குருவிட்ட பிரதேச செயலகத்தில் ரூபா 563,019 தொகையான நீர் வரி மற்றும் தண்டப் பணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 04. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 238,561,212 ஆக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,415,104,004 ஆக இருந்தது.

### 4.2 நிறுவனத்துக்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சட்ட விடயங்கள்

மாகாண சபையின் 13 அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு எதிராக வெளித்தரப்பினர்களால் தொடுக்கப்பட்டிருந்த 129 சட்ட அம்சங்களும் 06 அமைச்சுக்கள் / திணைக்களங்களால் வெளித்தரப்பினர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட 07 சட்ட அம்சங்களும் 2015 திசெம்பர் வரை விசாரணை செய்யப்பட்டுக் காணப்பட்டன.

### 4.3 செலவுகளின் அசாதாரண அதிகரிப்பு

மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான செலவுகளை 2015 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான செலவுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவு விடயங்களுக்குரிய உள்ளபடியான செலவு 2015 ஆம் ஆண்டிற்கான செலவுகளை விட 64 சதவீதத்தால் அசாதாரண ரீதியில் அதிகரித்திருந்தது.

## 05. அதிகாரசபை கணக்குகள் / நிதியக் கணக்குகள்

### (அ) பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. தாபனவிதிக் கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் உப பிரிவின் பிரகாரம் பதவியுயர்வின் பின்னர் சம்பள ஏற்றங்கள் வழங்கப்படும் போது புதிய நியமனத் திகதி சம்பள ஏற்றத் திகதியாக இருக்கவேண்டியதுடன் சம்பள ஏற்றத்தினை வழங்குவதற்காக ஒரு ஆண்டு கடந்திருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக புதிய நியமனத் திகதியினைக் கருத்தில் கொள்ளாது 06 மாதங்கள் கடந்த பின்னர் சம்பள ஏற்றம் வழங்கப்பட்டிருந்தது.

II. 2014 ஆம் ஆண்டின் பிரதான அபிவிருத்தி இலக்காக 2015 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களுக்குள் சாரதிப் பயிற்சிப் பாடசாலை ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், அதிபர் ஒருவரைச் சேர்த்துக் கொள்ளுதல், பஸ் வண்டி ஒன்றைக் கொள்வனவு செய்தல் என்பன இனங்காணப்பட்டிருந்தன. அந்த இலக்குகள் 2015 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்படாதிருந்ததுடன் சப்ரகமுவ பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் புதிய சேவை நியதிச்சட்டத்தை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

III. சப்ரகமுவ பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் முன்னாள் தலைவருக்குச் சொந்தமான 05 பஸ்கள் பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரம், மாதாந்த சம்பவக்குறிப்பு பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படாது ஓடியிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 திசெம்பர் 31 வரை அதற்காக ரூபா 1,001,600 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

IV. 02 மாதங்களிலிருந்து 14 மாதங்கள் வரையான காலப்பகுதியாக சம்பவக்குறிப்பு புத்தகங்கள் பெற்றுக்கொள்ளப்படாது 19 பஸ் வண்டிகள் ஓடியதினால் ரூபா 168,000 தொகையும் ஓடிய 12 பஸ்களிடமிருந்து மாதாந்த சம்பவக்குறிப்பு புத்தக கட்டணம் ரூபா 24,000 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

V. பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவருக்கு வெளிக்களப் பரிசோதனைக்காக ஒரு மாதத்திற்கு 04 நாட்களுக்கு எரிபொருள் படியாக ரூபா 15,000 படி ஆண்டிற்கு ரூபா 180,000 செலுத்தப்பட்டிருந்தும் மேற்பார்வை செய்த இடம் மற்றும் மேற்பார்வை அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

VI. 2013 திசெம்பர் 02 ஆந் திகதிய 11/2003 ஆம் இலக்க பொதுச் சேவை சேமலாப நிதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு சேமலாப நிதியம் அறவிடப்படாமை மற்றும் கொடுப்பனவைத் தாமதித்தல் தொடர்பாக மிகைக் கட்டணமாக ரூபா 74,768 தொகையும் ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பங்களிப்பு பணமாக ரூபா 63,850 தொகையும் அதிகாரசபையின் பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

சப்ரகமுவ மாகாணசபையின் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நியதிச்சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் எதனையும் அதிகாரசபை தொடங்கியதிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 25 வருட காலத்துள் நிறைவேற்றுவதற்கு அதிகாரசபைக்கு இயலாதிருந்தது. எவ்வாறாயினும் நிர்வாகப் படி மற்றும் பணிப்பாளர் சபை படியாக ஆண்டிற்கு ரூபா 600,000 இற்கு மேற்பட்ட பணம் தலைவரை உள்ளடக்கிய பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 06. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 பிரதான செயற்பணிக்கு முரணான செயற்பாடுகள்

ஆளுனர் செயலகத்தில் 2015 இன் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 800-03-02-2401 செலவு விடயத்தின் கீழ் பயிற்சி மற்றும் இயலளவு அபிவிருத்திக்காக ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிதி ஏற்பாட்டை வழங்கும் நோக்கத்திற்கு முரணாக 2015 ஆம் ஆண்டின் போது அதில் ரூபா 1,935,000 செலவு செய்து புத்தகங்களைக் கொள்வனவு செய்து மாகாணத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகள், நூல்நிலையங்கள், நகரசபை என்பவற்றை உள்ளடக்கிய நிறுவனங்களுக்கும் பல்வேறு தனிப்பட்டவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் மொத்த நிதி ஏற்பாட்டில் 61% சேமிப்பு அவதானிக்கப்பட்டது.

### 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக 31 வகையான விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தொழில் நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 13 வகையான விளையாட்டுப் பொருட்களுக்காக எதுவித

காரணமும் காட்டாது ஆகக்குறைந்த விலையை நிராகரித்து கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்ததனால் ரூபா 1,031,375 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 1,146,220 மொத்த தொகையான 12 வகையான பொருட்களும் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்த 12 வகையான பொருட்களும் 2016 ஜுன் 08 ஆந் திகதியளவிலும் பிரயோசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 மார்ச் 27 ஆந் திகதிய நிதி ஆணைக்குழு செயலாளரினால் மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு விலாசமிடப்பட்ட FCBP/4/2/2015 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தில் ரூபா 25 மில்லியனுக்கு குறைவான எதுவித செயற்பாட்டையும் கட்டம் கட்டமாகப் பிரிக்கக் கூடாது என ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலாவும் விளையாட்டும் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மூலம் ரூபா 107,838,347 பெறுமதியான வேலைகளின் 75 செயற்திட்டங்களுக்காக மேற்கூறிய ஆலோசனைகளுக்கு முரணான வகையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தன. இச்செயற்திட்டங்களை கட்டம் கட்டமாகப் பிரிக்காது 34 செயற்திட்டங்களாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயற்படுத்தக்கூடியதாகக் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மதிப்பீடு செய்யப்பட்ட முழுப் பெறுமதிக்கும் போட்டி விலை மனுக்கள் கோரப்பட்டு செயற்படுத்தப்படாமையின் காரணமாக 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் கூடிய தரம் மற்றும் ஆகக் குறைந்த கிரயத்துடன் உச்ச அளவு பொருளாதார நலனை கருத்தில் கொள்வதற்கும் அனுபவம் வாய்ந்த ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு கொள்வனவில் பங்குபற்றுவதற்கு நியாயமான, சமமான, உச்ச அளவு சந்தர்ப்பங்களை வழங்குவதற்குமான குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காணி விவசாய அமைச்சின் மூலம் ரூபா 502,775 செலுத்தப்பட்டு 2015 திசெம்பர் 23 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 165 வான் கதவுகள் வாகொல்ல மாவட்ட விவசாய பயிற்சி நிலைய வளவில் 2016 ஜுன் 08 ஆந் திகதி வரை 05 மாத காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றமையும் அவற்றின் நீள அளவானது கட்டளையிடப்பட்ட மாதிரிகளுக்கு இணங்கியிருக்காமையும் பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) பொல்கஹலியத்த வெளி அணைக்கட்டு மற்றும் வயல்களுக்கு நீரைப் பெற்றுக் கொள்ளும் அணைக்கட்டைத் தயாரித்தல் மற்றும் அச்செயற்திட்டத்தின் இரண்டாவது பகுதி ஆகிய செயற்திட்டங்கள் ரூபா 886,603 உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிக்கு அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்தின் மூலம் சாத்தியவள அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இரண்டு செயற்திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டது ஒரே அணையின் இரண்டு பகுதிகளாக இருந்த போதிலும் ஒரு அணையின் அகலம் தேவையற்ற வகையில் விரிவுபடுத்தப்பட்டிருந்ததனால் முதலாவது செயற்திட்டம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாகவும் அதன் காரணமாக ரூபா 92,578 தொகை மிகையாகச் செலவு செய்யப்பட்டிருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது.

## 6.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடியிருப்பதற்கு பொருத்தமான ஒரு வீடு இல்லாமையின் அடிப்படையில் வீடுகளில் அடிமையாகயிருக்கும் பிள்ளைகளை மீண்டும் சொந்த குடும்ப அலகிற்கு ஒப்படைத்தல் மற்றும் அவ்விடயத்தின் அடிப்படையில் குடியிருப்பதற்கு எதிர்பார்க்கும் பிள்ளைகளை சொந்த குடும்ப அலகுக்குள்ளேயே நிறுத்திவைத்தல் என்ற குறிக்கோளின்

அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற ''மீண்டும் இல்லத்திற்கு'' மற்றும் ''வீடுகளில் அடிமையாகயிருத்தலைத் தடுத்தல்'' என்ற தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டே வீடமைப்புச் செயற்திட்டம் தற்பொழுது 8 ஆண்டு காலமாக அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் ரூபா 1,867,840 செலவு செய்து 15 நலன்பெறுனர்களுக்கு நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக செயற்திட்டத்தை அமுல்படுத்தும் வகை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய செயற்திட்ட அறிக்கை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. திட்டங்களைத் தயாரிக்கும் போது காணப்பட்ட பலவீனங்களின் காரணமாக குடும்ப அலகிற்கு நிதியை ஒதுக்கீடு செய்வதில் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் உறுதியான நியமும் காணப்படவில்லை. செயற்திட்டங்களின் வெற்றியானது முதலில் உரிய நன்னடத்தை உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மற்றும் செயற்திறனின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன் திணைக்களம் மற்றும் அமைச்சு மட்டத்திலான மேற்பார்வைகளும் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

I. பெல்மடுல்ல நன்னடத்தை அலுவலகத்தில் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் அப்பிரதேசத்திலுள்ள பிள்ளைகளை வீடுகளில் அடிமைப்பட்டிருப்பதைத் தவிர்ப்பதற்காக அப்பிள்ளைகளின் குடும்ப அலகிற்கு வீடு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா 150,000 தொகையான தொடக்க மதிப்பீடு ஒன்றும் பின்னர் ரூபா 75,000 தொகையான மேலதிக மதிப்பீடு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 ஜூன், ஆகஸ்ட், செப்தெம்பர் ஆகிய மாதங்களில் ஒரு தடவைக்கு ரூபா 75,000 படியாக ரூபா 225,000 கூட்டு மொத்தமான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரை முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்காக ரூபா 224,800 தொகையான விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டமைக்கு போட்டோ பிரதிகளுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் போது அவ்வாறான வீடு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 149,800 தொகையான விலைப்பட்டியல்கள் போலியானவை என்பதுவும் மேலும் அவதானிக்கப்பட்டது.

II. இரத்தினபுரி நன்னடத்தை அலுவலகத்தின் மூலம் அந்த அதிகாரப் பிரதேசத்திலுள்ள பிள்ளை வீடு ஒன்றில் அடிமையாக இருப்பதனைத் தவிர்ப்பதற்காக ரூபா 75,000 செலவு செய்து 21 X 16 அடி அளவுள்ள முழுமையான அறை ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 மார்ச் 01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் போது திட்டமிடப்பட்ட வகையில் அறை ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 5.432 ஹெக்டயர் அளவான கிதுல்கல மாவட்ட வைத்தியசாலைக் காணிக்கு நிரந்தர பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன் 0.470 ஹெக்டயர் அளவான காணியில் அத்துமீறிக் குடியிருப்பவர்கள் நிரந்தரக் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து வசித்துவருகின்ற போதிலும் அதனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8:12:3 ஆம் பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்ட பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் ஏனைய இணங்கப்பட்ட கட்டளைகளுக்கு உரியவையாக இருக்கவேண்டியதுடன் அது தொடர்பான தொழில்நுட்ப அறிவினைக் கொண்ட நபரினால் உரிய சிபார்சுகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் ரூபா 361,200 பெறுமதியான 05 கணனிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

## 6.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) I. பிரதம செயலாளர் அலுவலகத்தில் 2014 ஆம் ஆண்டிற்கான பிராந்திய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயிற்சி மற்றும் இயலளவு அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 6,321,700 தொகையானது 2014 திசெம்பர் 31 ஆந் திகதி மாகாண சபையின் 44 கௌரவ உறுப்பினர்களுக்கு 04 மடிக்கணனிகள், 13 டெப் கணனிகள், 27 நடமாடும் தொலைபேசிகள் என்பவற்றை வழங்குவதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் அவை ஒதுக்கப்பட்ட நோக்கம் அல்லாத செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் எதுவித நிபந்தனைகளுமின்றி குறித்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

II. கொள்வனவு வழிகாட்டல் கோவைகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாதிரிகளில் அவற்றின் வியாபாரப் பெயர் குறிப்பிடப்படாதிருக்க வேண்டிய போதிலும் 13 டெப் கணனிகள், 27 நடமாடும் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்யும் போது அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை பருமனளவு அடிப்படையிலான நிதியத்தின் கீழ் எலபான, கஹவத்த மற்றும் கலவான பிரதேச செயலகப் பிரிவுகளில் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக உரிய பிரதேச செயலகங்களின் மூலம் ரூபா 1,176,457 மொத்த தொகை செலவு செய்து 54,719 பயிற்சிப் புத்தகங்கள் 2014 திசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப்பயிற்சிப் புத்தகங்களை அச்சிடுகையில் உரிய பிரதேச செயலகங்களின் கட்டளைகளுக்கு முரணாக அரசியல்வாதிகளின் புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டு வெளிப்பக்கம் அச்சிடப்பட்டிருந்ததன் காரணமாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் அப்புத்தகங்களை பிரதேச செயலகங்களின் மூலம் பகிர்ந்தளிப்பதை நிராகரித்து மாகாண சபையின் சபைச் செயலகத்திற்கு 2015 ஏப்ரல் மாதம் ஒப்படைத்திருந்தார். இந்த அனைத்து புத்தகங்களும் 2016 ஜூன் 15 ஆந் திகதி வரை மாகாண சபையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

(இ) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து இளைஞர் சங்கங்களிலுமுள்ள விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு கிறிக்கட் மற்றும் கரப்பந்தாட்ட உபகரணங்களை வழங்குவதற்குத் திட்டமிட்டு ரூபா 1,724,530 செலவு செய்து 575 விளையாட்டு பொருள் தொகுதிகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் உரிய நியமங்களுக்கு இணங்கியுள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உத்தியோகத்தர்களால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. முதலமைச்சரினால் விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை திட்டமிடப்பட்டு விளையாட்டுக் கழகங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட பொருட்களில் ரூபா 1,466,880 பெறுமதியான பொருட்கள் மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந்த விளையாட்டுப் பொருட்கள் உரிய உறுப்பினர்களின் வீடுகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் எதுவும் 2016 மார்ச் 01 ஆந் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதுவும் முதலமைச்சின் களஞ்சியத்தில் ரூபா 22,750 பெறுமதியான 07 கரப்பந்துகளும் உரிய உறுப்பினரின் வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்ட ரூபா 14,940 பெறுமதியான 06 கரப்பந்து வலைகளும் பற்றாக்குறையாகக் காணப்பட்டன என்பதுவும் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) சமூக நலன்புரி, நன்னடத்தையும் சிறுவர் பாதுகாப்பும், கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சுக்கு லண்டனிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட அழைப்பு தொடர்பாக 2015 நவம்பர் 07 ஆந்

திகதியிலிருந்து 17 ஆந் திகதி வரை ஐக்கிய இராச்சியத்திற்கு சுற்றுப்பயணம் செய்வதற்காக விமான டிக்கட் கட்டணம், இடைநேர் படிகள் மற்றும் இணைந்த படிகளாக ரூபா 1,305,501 மொத்த தொகை மாகாண சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மாகாண கல்வி தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மூலம் மாகாண சபையைச் சார்ந்த கலாச்சார உத்தியோகத்தர்களையும் மத்திய அரசாங்கத்தின் கலாசார உத்தியோகத்தர்களையும் இணைத்து 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கும் கொள்வனவு மற்றும் மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களுக்கு வதிவிட செயலமர்வு ஒன்றினை நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2014 திசெம்பர் 21 மற்றும் 22 ஆந் திகதிகளில் நுவரெலியா சுற்றுலா விடுதியில் வதிவிட பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 176,411 செலவு செய்யப்பட்டிருந்தது. கலாசார உத்தியோகத்தர் செயலமர்வின் அடிப்படைக் குறிக்கோளாகிய 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதாக இருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரை அவ்வாறான ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கல்வி தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருக்கு, அமைச்சு செயலாளருக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளருக்கு 2015 திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 06 ஆந் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச மாணவர் மட்ட கவி கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக விமான டிக்கட் கட்டணம், இடைநேர் படிகள், இணைந்த படிகள் மற்றும் விசா கட்டணங்களாக ரூபா 1,016,157 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டுச் சுற்றுலாவிற்காக முகவர் நிறுவனத்தினால் உணவும் தங்குமிட வசதிகளும் வழங்கப்படுவதாக அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2015 மே 15 ஆந் திகதிய நி.அ 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மாகாண கல்வி அமைச்சர் மற்றும் அவரின் தனிப்பட்ட செயலாளர் ரூபா 539,997 தொகையை இணைந்த படிகளாகப் பெற்றிருந்தனர்.

(எ) மாகாண சபைச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மீண்டுவரும் நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 4,241,646 தொகை செலவு செய்து 70 நடமாடும் தொலைபேசிகள், 105 டிஜிடல் கமராக்கள், 40 வயர் அற்ற தொலைபேசிகள், 68 பெலேயர்கள், 45 பெக்ஸ் இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு தலைவரின் அன்பளிப்புக்களாக மாகாண சபையின் அமைச்சர்களுக்கு, உறுப்பினர்களுக்கு, சபைச் செயலகத்தின் பதவியணியினருக்கு, பிரதம செயலாளர் அலுவலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## 6.5 மோசடிக் கொடுக்கல் வாங்கல்களாகத் தோற்றுபவை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடசாலைக் கல்வி முறைமையை அறிவு மையத்தின் அடிப்படையாக பரிமாற்றம் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் மாகாண கல்வி அமைச்சினால் உலக வங்கி நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 14,329,900 செலவு செய்து 151 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 50 கணனிகள் தொடர்பான பௌதீகப் பரிசோதனையின் போது அக்கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த மாதிரிகளின் பிரகாரம் வழங்கவேண்டியிருந்த இரண்டு வெளி ஒலிபெருக்கிகளும் மவுஸ் பேட்டும் ஒரு கணனிக்காவது வழங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக சில கணனிகளுக்கு HDMI துணைக்கருவி இல்லை என்பதுவும் செயற்பாட்டு முறைமையில் குறைபாடு உள்ளன என்பதுவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மாதிரிகளின் பிரகாரம் கணனிகள் அமையப்பெற்றிருந்தன எனவும் அவர்களால் அவைகள் பரீட்சிக்கப்பட்டன எனவும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு உத்தியோகத்தர்களால் போலியான

உறுதிப்படுத்தல் ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய மாதிரிகளுடன் இணங்கியிருக்காத பொருட்களுக்காக பணம் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இர/ஹல்மில்லகெடிய மஹா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி கணக்கின் ரூபா 220,434 பெறுமதியான காசோலை அதிபரின் தனிப்பட்ட கணக்கிற்கு 2015 திசெம்பர் 16 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 6.6 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

கேகாலை பிரதேச செயலகத்தினால் மாகாண சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதிகளிலிருந்து ரூபா 9,996,097 பணம் மீளாய்வாண்டின் போது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது 2015 திசெம்பர் 31 ஆந் திகதி மீண்டும் பிரதம செயலாளரிடம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.

## 6.7 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மாகாண சபைக்குச் சொந்தமான பல்வேறு நிறுவனங்களில் பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை | பெறுமதி ரூபா | பயன்படுத்தப்படாது காணப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| (அ) | காணிகள் | 12 | குறிப்பிடப்படவில்லை | 10 ஆண்டுகள் |
| (ஆ) | கட்டிடங்கள் | 12 | குறிப்பிடப்படவில்லை | 10 ஆண்டுகள் |
| (இ) | வாகனம் | 01 | குறிப்பிடப்படவில்லை | 03 ஆண்டுகள் |
| (ஈ) | இயந்திரங்கள் | 02 | 209,886 | 15 ஆண்டுகள் |
| (உ) | ஏனையவை | 31 | 1,599,670 | 1-2 வரையான ஆண்டுகள் |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெலிஹூல் ஓயா ஊடாக பயணம் செய்கின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு உணவைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள், தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள், சுகாதார வசதிகளை வழங்குதல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு ரூபா 7,990,260 செலவு செய்து 2015 பெப்ரவரி 15 ஆந் திகதி வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட பெலிஹூல் ஓயா சுற்றுலா நிலையம் ஒரு ஆண்டிற்கு மேலாக பொதுமக்களின் பாவனைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவனெல்ல கல்வி வலயத்தில் மூடப்பட்ட 35 பாடசாலைகளில் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ள 11 பாடசாலைகளின் சொத்துக்களை பிரதேச செயலகத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 8,389,605 செலவு செய்து இர/பல/உடகம மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வுகூடம் 2015 ஏப்ரல் 06 ஆந் திகதி மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை மின்சார இணைப்புக்கள் இல்லாமையால் ஆய்வுகூடத்திலுள்ள 41 கணனிகளை செயற்படுத்துவதற்கு முடியாமையால் குறைந்த பயன்பாட்டிற்கு

உட்படுத்தப்பட்டிருந்தது. மொழி ஆய்வுகூடத்திற்காக ரூபா 2,050,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 20 கணனிகள் மற்றும் 20 தொடர்ச்சியான வலு வழங்கல் முறைமைகளும் (UPS) பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது பெட்டிகளில் காணப்படுவதுடன் அவற்றின் உத்தரவாத காலமும் கடந்திருந்தன.

(ஈ) கரவனெல்ல வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளை கணனிமயப்படுத்துவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2013 திசெம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த 20 மடிக்கணனிகள் 2015 திசெம்பர் 30 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்ததுடன் கணனிகளின் உத்தரவாத காலமும் கடந்திருந்தன.

(உ) கரவனெல்ல வைத்தியசாலை வளவில் 900 சதுரஅடி அளவான இடம் துரித கண்காணிப்பு அலகிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபா 04 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் 2012 ஜூன் மாதத்தில் வழங்கப்பட்டிருந்த போதிலும் தேவையான பதவியணியினர் வழங்கப்படாததால் 2015 திசெம்பர் 30 ஆந் திகதி வரை அந்த அலகு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண குறித்த செயற்பாட்டு அபிவிருத்தி மானியத்தின் கீழ் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்வதனை நோக்காகக் கொண்டு 17 GPS உபகரணங்களையும் படங்களையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 974,000 தொகை 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாததன் காரணமாக 2015 ஜூலை மாதம் வரை இந்த உபகரணம் விளைவற்றுக் காணப்பட்டது.

## 6.8 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவனெல்ல கல்வி வலயத்திலுள்ள 06 கஸ்டப்பிரதேச பாடசாலைகளில் சேவையாற்றிய 07 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னரும் கஸ்டப்பிரதேச படியாக ரூபா 73,417 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து கேகாலை கல்வி வலயத்திலுள்ள ஒரு பாடசாலையில் சேவையாற்றிய ஒரு ஆசிரியையால் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக முறையே 29 நாள், 154½ நாள், 82 நாட்கள் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றினை அறவீடு செய்யாது 2015 மார்ச் மாதத்திலிருந்து மேல் மாகாணத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

(இ) சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களுக்குரிய பட்டியல்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அளவீட்டு அறிக்கையானது பௌதீக பரிசோதனையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அளவீட்டின் பிரகாரம் முரண்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 61,294 தொகை உரிய ஒப்பந்த சங்கங்களுக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் வேலை பூர்த்திசெய்யப்படாமையினால் உரிய செயற்திட்டம் 03 வாரங்களிலிருந்து 54 வாரங்கள் வரை காலதாமதமடைந்திருந்ததுடன் ரூபா 239,590 தொகையான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்த்துவைக்கும் நட்டம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) அட்டுளுகம கல்வி அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் 2015 திசெம்பர் 08 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடனும் 2016 சனவரி 29 ஆந் திகதி மாவட்டத்தின் விடயத்திற்குப் பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தருடனும் மேற்கொண்ட

வேலைத்தள பரிசோதனையின் போது மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட சில வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் மாகாண விவசாயப் பணிப்பாளரின் அல்லது நிலத்தை அழகுபடுத்தல் செயற்பாடு தொடர்பான தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட உத்தியோகத்தரின் சிபார்சினைப் பெற்றுக்கொள்ளாது வேலைமுடிவு அறிக்கையின் அடிப்படையில் ரூபா 1,769,174 தொகை செலுத்தப்பட்டிருந்தது. குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் ஒப்பந்த பெறுமதி முழுவதையும் செலுத்தியதன் காரணமாக ரூபா 323,002 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6.9 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் 2015 ஆம் ஆண்டில் 1106 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 1,303,511,189 தொகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 237,829,143 பெறுமதியான 261 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு பல்லேபெத்த – புலுதொட்ட வீதி அபிவிருத்திக்காக 2011 திசெம்பர் 05 ஆந் திகதி பிரதான செயலகத்தினால் தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2013 ஏப்ரல் 04 ஆந் திகதியாக இருந்ததுடன் உரிய திகதியில் வேலையைப் பூர்த்திசெய்வதற்கு முடியாமையின் காரணமாக 04 சந்தர்ப்பங்களில் 558 நாட்கள் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளில் காட்டப்பட்டுள்ள கால நீடிப்புக்களுக்காக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களுக்கு முரணாகவும் எதுவித உறுதியானதும் நியாயமானதுமான அடிப்படையுமின்றி 323 நாட்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அக்காலத்திற்காக மேலதிகமாகச் செய்யப்பட வேண்டிய பொதுச் செயற்பாட்டுச் செலவுகள், விலை முரண்களைப் போல அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் இழக்கப்படுவதால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 37,132,054 ஆக இருந்தது.

## 6.10 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு அமைச்சுக்கள் / திணைக்களங்களினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற 147 நிர்மாண ஒப்பந்தங்கள் பல்வேறு காரணங்களினால் தாமதமடைந்திருந்ததுடன் 02 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் 146 நிர்மாண ஒப்பந்தங்களை ஆரம்பிக்காது முழுமையாகக் கைவிட்டிருந்தன.

(ஆ) கலவானை ஆதார வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பித்தல் ரூபா 1,399,015 மதிப்பீட்டின் அடிப்படையில் 2015 ஜூன் மாதத்தின் போது கலவானை நிறைவேற்று பொறியியலாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி வரை கூரை மாத்திரம் போடப்பட்டிருந்தது. புதுப்பித்தல் தாமதமடைந்ததன் காரணமாக 2016 பெப்ரவரி மாதம் வரை வீட்டு வாடகையாக ரூபா 116,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

## 6.11 பதவியணியினர் நிர்வாகம்

### 6.11.1 கல்வித்துறையில் பதவியணியினர் மிகையும் பற்றாக்குறையும்

மாகாண கல்வித் திணைக்களத்தினால் சப்ரகமுவ மாகாண பாடசாலைகளின் தற்போதைய ஆசிரியர்கள் தேவையினைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த உத்தேச ஆசிரியர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பல்வேறு பாடங்கள் தொடர்பாக ஆசிரியர் பற்றாக்குறையும் மிகையும் காணப்பட்டதுடன் விபரம் கீழே தரப்படுகின்றன.

| 6 ஆந் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை | | | | | 12 ஆந் தரத்திலிருந்து 13 ஆம் தரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடம் | பற்றாக்குறை | | மிகை | | பாடம் | பற்றாக்குறை | | மிகை | |
| | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| ஆங்கிலம் | 07 | 161 | 07 | 82 | விஞ்ஞானமும் லேதிக பாடங்களும் | 07 | 81 | 07 | 42 |
| தொழில்நுட்ப பாடம் | 07 | 633 | 07 | 52 | கலை – வணிக பாடங்கள் | 07 | 70 | 07 | 206 |
| ஏனைய பாடங்கள் | 07 | 1929 | 07 | 518 | தொழில்நுட்ப பாடங்கள் | 07 | 35 | 02 | 3 |

### 6.11.2 ஆசிரியர் மிகை, பற்றாக்குறை, இணைத்துக்கொள்ளல் என்பன

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாவனல்ல கல்வி வலயத்திலுள்ள 39 பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக 01 ஆண்டிலிருந்து 09 ஆண்டுகள் வரையான காலம் ஆசிரியர் சேவையிலுள்ள ஆசிரியர்கள் அதிபர் பதவிகளில் பதிற்கடமையாற்றியிருந்தார்கள். அவ்வாறே வலயத்திலுள்ள பாடசாலைகளுக்காக ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளலில் முரண்பாடுகள் காணப்பட்டதுடன் 14 பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 315 நபர்களாகக் காணப்பட்ட போதிலும் 406 நபர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதனால் 91 நபர்கள் மிகையாகக் காணப்பட்டார்கள். 15 பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 320 ஆக இருந்த போதிலும் 227 போ்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததனால் 93 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைகளும் காணப்பட்டன.

(ஆ) 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆசிரியர்களின் சேவைக்காலம் ஒரு பாடசாலையில் 08 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மாவனெல்லை வலயத்தில் 129 வலயத்தில் 08 தொடக்கம் 36 ஆண்டுகள் வரை ஒரே பாடசாலையில் சேவையாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1295 நபர்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கே/வலகம்பா வித்தியாலயத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 26 நபர்களாக இருந்த போதிலும் 36 நபர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். 10 மிகை ஆசிரியர்கள் தொடர்பாக 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி பிரதி அதிபரினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக வலயக் கல்வி அலுவலகம் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. 06 ஆசிரியர்களுக்காக 2015 ஆம் ஆண்டுக்கான கால அட்டவணை வழங்கப்படாதிருந்ததுடன் அதிபர் அந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆலோசனைகளின் பிரகாரமும் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2007 திசெம்பர் 20 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக தெஹியோவிட்ட கல்வி வலயத்திலுள்ள 181 மாகாண சபை பாடசாலைகளில் 09 ஆண்டுகளிலிருந்து 28 ஆண்டுகள் வரை இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது ஒரே பாடசாலையில் சேவையாற்றிய 922 ஆசிரியர்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 6.11.3 சுகாதாரத் துறையிலுள்ள பதவியணியினர் மிகையும் பற்றாக்குறையும்

சுகாதாரத் துறையிலுள்ள ஒவ்வொரு சேவைகளிலும் பதவியணியினர் மிகை மற்றும் பற்றாக்குறையானது பல்வேறு நிறுவன மட்டங்களில் கீழே தரப்படுகின்றது.

| | மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் | | இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மாகாண வைத்தியசாலை | | கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கேகாலை மாவட்டத்திலுள்ள மாகாண வைத்தியசாலை | |
|---|---|---|---|---|---|---|
| | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை |
| | | | | - | | -- |
| வைத்தியர் | - | 09 | 02 | 102 | - | 40 |
| தாதியர் | - | 01 | 18 | 75 | 66 | 18 |
| மருந்தகவியலாளர் | - | - | - | 10 | - | 10 |
| பொதுமக்கள் சுகாதாரப் பரிசோதகர் | - | 01 | - | 37 | - | 06 |
| குடும்ப சுகாதார ஊழியர் | - | - | - | 121 | - | 87 |
| மருந்து கலவையாளர் | - | - | - | 53 | - | 30 |
| சேவையாளர் | - | - | - | 56 | - | 37 |
| சாரதிகள் | - | 06 | - | 26 | - | 15 |
| சமையலாளர் | - | 02 | 01 | 19 | - | 11 |
| காவலாளி | - | | - | 51 | - | 21 |
| பாதுகாப்பு ஊழியர் | - | | - | 54 | - | 30 |
| கணக்காளர் | - | 01 | - | | - | 20 |
| மருத்துவ ஆய்வுகூட நிபுணர் | - | 01 | - | 18 | - | 08 |
| முகாமைத்துவ உதவியாளர் | - | 04 | - | 07 | - | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | 10 | 06 | 38 | - | 30 |
| சுகாதாரப் பணி உதவியாளர் | - | 16 | 08 | 102 | 131 | 57 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொதுமக்கள் சுகாதாரத்துறை உத்தியோகத்தர் | 01 | - | - | - | 12 | - |
| அலுவலக உதவியாளர் | - | 05 | - | 10 | - | 05 |
| | --- | --- | --- | ---- | ---- | ---- |
| மொத்தம் | 01 | 56 | 35 | 779 | 209 | 425 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்பட்டன.

(அ) உதுகொட வைத்தியசாலையில் 05 ஆண்டுகளிலிருந்து 31 ஆண்டுகள் வரையான காலம் சேவையில் ஈடுபட்டிருந்த சேவையாளர்கள் 28 நபர்களாக இருந்ததுடன் அவர்களுக்கு இடமாற்றங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று ஆதார வைத்தியசாலைகள், 02 மாவட்ட வைத்தியசாலைகள், 05 கிராமிய வைத்தியசாலைகள், 14 மத்திய மருந்தகங்கள், 07 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள், ஒரு தோட்ட வைத்தியசாலை, இருதய சிகிச்சைப் பிரிவு, ஹெம்மாதகம புறநகர் வைத்தியசாலை என்பவற்றில் சுகாதாரப் பணி ஊழியர்களின் (கனிஷ்ட) அங்கீகரித்த பதவியணி 175 ஆக இருந்த போதிலும் அந்த அளவை மிகைத்து 172 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) கிதுல்கல மாவட்ட வைத்தியசாலையிலுள்ள பதவியணியினர்களில் 28 உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் 12 ஆண்டுகளிலிருந்து 34 ஆண்டுகள் வரையான காலம் இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**6.12 மருந்து முகாமைத்துவம்**

இரத்தினபுரி பிராந்திய சுகாதார பிரிவில் பின்வரும் அவதானிப்புக்கன் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இரத்தினபுரி பிராந்திய மருந்து வழங்கல் பிரிவில் வருடாந்தம் வழங்குவதற்காக தேவையான இருப்பு வருட இறுதியில் காணப்பட்டிருந்திருந்தும் 24 மருந்துப் பொருட்கள் தொடர்பாக தேவையற்ற வகையில் இருப்புக்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. இதற்கிணங்க ரூபா 3,563,168 தொகையான மருந்து இருப்பானது வருட இறுதியில் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததாக தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட பௌதீக இருப்பு மெய்மையாய்வுச் சபையினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 7,754,483 பெறுமதியான 73 மருந்துப் பொருள் இருப்பும் பெறுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத 41 வகையான மருந்து இருப்பும் காலங்கடந்திருந்தன.

(இ) தரம் குறைந்த மருந்துகளுக்கான இருப்பு பேரேட்டின் பிரகாரம் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 18 வகையான மருந்துகள் தொடர்பாக ரூபா 22,707,344 பெறுமதியான மருந்து இருப்பு ஒன்றும் பெறுமதியைத் தேடிக்கண்டு பிடிக்க முடியாத 03 வகையான மருந்துகளுக்குரிய இருப்பும் அவதானிக்கப்பட்டன.

(ஈ) 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி தெரிவுசெய்யப்பட்ட 92 மருந்துப் பொருட்கள் தொடர்பாக பௌதீக இருப்பு பரிசோதனையின் போது பேரேட்டின் படியான மீதிக்கும் பௌதீக இருப்புக்கும் இடையே 07 மருந்துப் பொருட்கள் தொடர்பாக ரூபா 288,092 தொகையான பற்றாக்குறையும் 20 மருந்துப் பொருட்கள் தொடர்பாக ரூபா 190,470 தொகையான மிகையும் அவதானிக்கப்பட்டன.

(உ) ஒவ்வொரு வைத்தியசாலை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய நிறுவனங்களுக்கு மருந்து இருப்புக்களை வழங்கும் போது அந்நிறுவனங்களால் தேவையான மருந்துகள் தொடர்பாக உரிய தகவல்களைக் (அதாவது மருந்தின் பெயர், SR இலக்கம், தற்பொழுது களஞ்சியத்தில் காணப்படும் அளவு, தேவையான அளவு) குறிப்பிடப்பட்டுப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தரின் சிபார்சுடன் மருந்துகள் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், சிபார்சுகள் இன்றி பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூலக் கட்டளைகள் மற்றும் தொலைபேசிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளுக்காக மருந்துகள் வழங்குதல் 2015 ஆம் ஆண்டின் போது தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 6.13 வங்கி கணக்கிணக்கம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபையின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்பட்டு கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலத்தைக் கடந்த ரூபா 9,781,771 தொகையான 243 காசோலைகள் தொடர்பாக சப்ரகமுவ மாகாண நிதி விதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 06 மாத காலம் கடந்த தேறப்படாத ரூபா 1,557,326 கூட்டுமொத்த தொகையான வைப்புக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பண்ணிரண்டு வங்கி கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத வரவுவைத்தல்களின் மொத்த தொகை ரூபா 1,192,177 ஆக இருந்ததுடன் 10 வங்கி கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத செலவுவைத்தல்களின் மொத்தம் ரூபா 4,736,240 ஆக இருந்தது.

### 6.14 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புமேற்கொள்ளப்படுகின்றன.

2006 மார்ச் 18 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரசாங்க செலவுகள் சுற்றுநிருபத்தின் மற்றும் 2006 ஒக்தோபர் 23 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் கடிதத்தின் பிரகாரம் முதலமைச்சருக்கு இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களும் ஒரு பாதுகாப்பு வாகனமும் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 2015 ஆம் ஆண்டின் போது 14 வாகனங்கள் முதலமைச்சரினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது முதலமைச்சினால் ரூபா 9,394,883 செலவு செய்யப்பட்டுமிருந்தது.

### 6.15 வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சப்ரகமுவ மாகாணத்திற்குரிய 1133 பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 175 மாத்திரமாகக் காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டிற்காக அது 164 மாத்திரமாக இருந்தது.

(ஆ) தெஹியோவிட்ட வலயத்திலுள்ள 25 பாடசாலைகளில் எதுவித பொருள் மெய்மையாய்வும் இடம்பெறாதிருந்ததுடன் 17 பாடசாலைகளில் 1994 ஆம் ஆண்டின் பின்னரும் 15 பாடசாலைகளில் 1995 ஆம் ஆண்டின் பின்னரும் பொருள் மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) நிவிதிகல, பலாங்கொடை, எம்பிலிபிடிய, கேகாலை மற்றும் மாவனெல்ல ஆகிய 05 கல்வி வலயங்களைச் சார்ந்த 230 பாடசாலைகள் 2010 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டு வரை பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தைச் சார்ந்த 17 நிறுவனங்களில் 11 நிறுவனங்களும் இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தைச் சார்ந்த 108 நிறுவனங்களில் 20 நிறுவனங்களும் 2014 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வை நடாத்தியிருக்கவில்லை.

## 07. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 7.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

ஐந்து நிறுவனங்களினால் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது 10 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தின் படியும், 12 திணைக்களங்கள் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் படியும், 02 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் படியும், நடாத்தியிருந்ததுடன் 02 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் சம்பந்தமாக எதுவித குழுக் கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 7.3 கொள்வனவுத் திட்டம்

02 அமைச்சுக்களால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.4 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

மாகாணக் கணக்குகள் குழு கலந்தாலோசித்த 2002 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையான 04 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட 05 அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்குரிய 68 கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக சரி செய்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

## 08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சப்ரகமுவ மாகாண சபையிலுள்ள நிறுவனத் தலைவர்கள் மற்றும் பிரதம செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடும் நிதிக்கட்டுப்பாடும்
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) சொத்துக்கள் மற்றும் மனித வளங்கள் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) செயற்திட்டங்களை அமுலாக்கல்
(ஊ) பாடசாலை முகாமைத்துவம்
(எ) வைத்தியசாலை முகாமைத்துவம்